# அழகப்பா பல்கலைக்கழகம்

((தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

காரைக்குடி – 630 003, தமிழ்நாடு, இந்தியா




19.7.2018

## குரூப் – 2 தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலமாக நடக்கவிருக்கும் குரூப்-2 தேர்விற்கான சிறப்பு பயிற்சி மற்றும் மாதிரித்தேர்வு போன்றவை காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் முன்னதாகவே பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தேர்வுகளை சிறப்பாக எதிர்கொள்ள, இத்தேர்விற்கு தயார் செய்து அதில் வெற்றியும் கண்ட வல்லுநர்களை வைத்து பயிற்சி அளிப்பது இப்பயிற்சியின் சிறப்பம்சமாகும். இத்தேர்விற்கான சிறப்பு பயிற்சி வருகிற ஞாயிற்றுக் கிழமையன்று (22.07.2018) தொடங்கப்பட உள்ளது. தொடர்ந்து வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பயிற்சி நடைபெறும் இந்த இலவச பயிற்சி வகுப்புகளில் வேலைநாடுநர்கள் கலந்து கொள்ளலாம்

இப்பயிற்சியில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள் அழகப்பா பல்கலைக்கழக லெ.சித.லெ பழனியப்ப செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்திற்கு நேரில் சென்று பெயரை பதிவு செய்து கொள்ளலாம். 04565-223266 என்ற தொலைபேசியிலோ அல்லது 8870781897 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவு செய்யலாம்.

அனைத்து மாணவ மாணவியர்களும் மற்றும் இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பவர்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி இலவச பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பேரா. ஹா. குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்